


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ஏழாலை சூராவத்தையைப் பிறப்பிடமாகவும்,
இல. 55/4 கணேசபுரத்தை நிரந்தர
வதிவிடமாகவும் கொண்ட

# அமரர் யோகரட்ணம் தஜேந்திரன்

## அவர்களின் 45ம் நாள் நினைவு மலர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

மேன்மைமிகு நற்பண்புகளின்
நிலைக்களனாய் விளங்கி,
அழகு, அன்பு, கருணை, பணிவு
என்பவற்றின் மொத்த வடிவாகி,
தனக்கென மட்டும் வாழாது
தன் இனத்தின் விடிவிற்காகவும்,
இதய சுத்தியுடன் தன்னை அர்ப்பணித்து
செயலாற்றிய கர்ம வீரன்,
எம் வாழ்வின் ஒளி விளக்காக விளங்கி,
எம் இதயத்தில் நீங்கா இடம் பிடித்த
எமது அன்புத் தெய்வத்தின்
பாதக் கமலங்களில்
கண்ணீர்க் காணிக்கையாக
சமர்ப்பிக்கின்றோம்.

**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"



மண்மகிழ்
08
11
1970

கண்நெகிழ
10
06
2017

# அமரர் யோகரட்ணம் தஜேந்திரன்

## அவர்களின்
## திதி நிர்ணய வெண்பா

சீரார் ஏவிளம்பி சேரிளமை ஆனிமாத
பூர்வ பட்ச பிரதமைத் திதியதனில் - பார்புகழும்
தஜேந்திரன் என்னும் பண்புடையோன் அரன்பாதம்
கதியெனவே விரைந்து சென்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# தோத்திரப் பாடல்கள்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனைமுகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக்கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்திலிடர்ப்படோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே எந்நாளுந்துன்ப மில்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மை யான சங்கரன்நற்
சங்கவெண் குழயோர் காதிற் கோமற்கே
நாமென்றும் மீளா ஆளாய்க் கொய்ம் மலர்ச்சே
வடியிணையெ குறுகி னோமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பு இலா மணியே
அன்பினில் விளைந்த ஆர் அமுதே
பொய்ம்மையே பெருக்கி பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்கு
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்தருளுவது இனியே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெம் சிவனைத்
திருவிழீமிழலை வீற்றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டு கண்டுள்ளங்
குளிரவென கண் குளிர்ந்தனவே.

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக நாயகன்சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன் பெற்றதார் பெறுவார் உலகில்
ஊரும் உலகும் கழற உழறி உமை மண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

மன்றின் மணி விளக்கெலாம்மருவு முகநகை போற்றி
ஒற்றிய மங்கள நாணின் ஒளி போற்றி உலகும்பர்
சென்று தொழ அருள் சுரக்கும் சிவகாம சுந்தரிதன்
நின்ற திரு நிலை போற்றி நிலவு திருவடிகள் போற்றி.

## திருப்புகழ்

வசனமிக போற்றி — மறவாதே
மனதுதயராற்றி — லுழலாதே
இசைபயில்சடாட்சர — ரமதாலே
இகபரசௌபாக்கியம் — அருள்வாயே
பசுபதிசிவாக்யம் — உணர்வோனே
பழனிமலைவீற்ற — ருளும்வேலா
அசுரர்கிளைவாட்டி — மிகவாழ
அமரர்சிறைமீட்ட — பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வளாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறையரசுசெய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திரு.யோகரட்ணம் தஜேந்திரன் அவர்களின் வாழ்வியல் சுவடுகள்

இலங்கை மணித்திருநாட்டின் வடக்கே அமைந்துள்ள எழில் மிகுந்ததும், தமிழ் மணம் வீசுகின்றதும், தமிழ்ப் புலவர்கள் தமிழை வளர்த்த பல்வேறு வர்த்தகர்கள், ஞானிகள் வாழ்ந்த சங்கிலி மன்னன் ஆண்ட யாழ் பாடி பாணன் பரிசு பெற்ற யாழ்ப்பாணம் என்ற முத்திலங்கும் தேசத்தில் ஏழாலை பகுதியில் கந்தையா பூரணம் தம்பதியர்களின் மகன் திருவாளர் யோகரட்ணம் அவர்களும் தம்பித்துரை பரிமளம் தம்பதியர்களின் மகள் இந்திராணி அவர்களும் இணைந்து திருமண பந்தம் செய்து சீரான வாழ்க்கை நடாத்தி வந்ததன் பயனாக மூன்று முத்துக்களை ஈன்றெடுத்தனர்.

மூத்த மகன் யொஜேந்திரன், அடுத்தவர் தஜேந்திரன், கடைசி மகன் றஜேந்திரன் ஆவார்கள். இவர்கள் வாழ்ந்த ஆரம்ப இடம் யாழ்ப்பாணம் ஏழாலை சூராவத்தை என்ற சிறப்பு மிகு பதியாகும். இக்கிராமத்தில் உறவினர்களுடன் பின்னிப் பிணைந்து வாழ்ந்தார்கள்.

திரு.தஜேந்திரன் அவர்கள் தனது சிறுபராயத்திலேயே தனது தகப்பன் வழி பேரன் பேத்தியர்களுடன் செந்நெல் விளைந்து சோறு கொடுக்கும் நீர்வளம் நிலவளம் நிறைந்த கிளிநொச்சி மாவட்டத்தில் எட்டாம் வாய்க்கால் உருத்திரபுரம் என்ற கிராமத்தில் மகிழ்வோடு வாழ்ந்து தனது ஆரம்பக் கல்வியை கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரியிலும், 1982 தொடக்கம் 1983 காலப்பகுதியில் இளவாலை சென்கென்றீஸ் கல்லூரியிலும், உயர் வகுப்பை கிளிநொச்சி மத்திய கல்லூரியிலும் கற்று வந்தார்.

தனது பாடசாலை வாழ்வில் மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோருடன் மிகவும் அன்போடும் பண்போடும் பழகி ஒரு நல்ல மாணவனாகத் திகழ்ந்தார்.

தான் வாழ்ந்து வளர்ந்த கிராமத்திலும், பிரதேசத்திலும் அவற்றின் வளர்ச்சிக்காக பாடுபட்ட ஒரு சிறந்த மனிதன். சமய சமூக தொண்டுகள் புரிந்து மக்கள் மத்தியில் நல்ல அபிப்பிராயம் பெற்றவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணேசபுரம் சர்வார்த்த சித்தி விநாயகர் ஆலய நிர்வாக சபையின் பொருளாளராக இருந்து ஆலய வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டவர்.

குறிப்பாக கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்தின் நீண்டகால பொருளாளராக அங்கம் வகித்து இன்று மிகவும் ஓங்காரமாகக் கோபுரத்துடன் காட்சியளிக்கும் முருகனின் ஆலய வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டவர் என்பது வெளிப்படையானது.

இவர் தனது இருபத்தைந்தாம் அகவையில் இல: 63/ 1 கணேசபுரத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட திரு.திருமதி குலசேகரம் சறோஜினிதேவி தம்பதிகளின் பிள்ளைகளான சசிகலா, சந்திரசேகரம், குணசேகரம், வஸ்தலா, தட்சலா, பிரமிளா ஆகியோரில் ஐந்தாவது மகளான தட்சலா என்ற பெண்மணியை 1995ம் ஆண்டு பங்குனி மாதம் பதினேழாம் திகதி கிளிநொச்சி முருகன் சந்நிதானத்தில் திருமாங்கல்யம் செய்து 55/4 கணேசபுரம் பகுதியில் தனது இல்வாழ்க்கையை ஆரம்பித்து சிறப்போடு வாழ்ந்து வந்ததன் பயனாக தயூரா என்ற பெண் மகவையும் டிதுசன் என்ற ஆண் மகவும் பெற்றெடுத்து சீரும் சிறப்போடும் வாழ்ந்து வந்தனர்.

தஜேந்திரன் அவர்கள் 2001ம் ஆண்டு தை மாதம் பதினைந்தாம் திகதி கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கீழுள்ள மாவட்ட பொது வைத்தியசாலையில் நோயாளர் காவுவண்டி சாரதியாக இணைந்து தனது கடமையை மிகவும் விசுவாசத்தோடும், பற்றோடும் செய்து வந்தவர். தனக்கென வாழா பிறருக்கு உரியவர் தனது தொழிலை தொண்டாகக் கருதி அதர்மம் அழிந்து தர்மம் நிலைக்க அருச்சுனன் கிருஸ்ணனுக்கு தேர்ச்சாரதியாக வீற்றிருந்தது போன்று பலிகளம் புகுந்து வலி சுமந்த கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கு நோயாளர் காவுவண்டிச் சாரதியாக பலருக்கு வாழ்வு கொடுத்த உத்தமர். போர்க்கால சூழ்நிலையில் விமானக்குண்டு வீச்சு, எறிகணை வீச்சு என்பவற்றிற்கு மத்தியில் தன்னுயிரை துச்சம் என மதித்து காயப்பட்ட பலரின் உயிரை காத்த உத்தம மனிதனாக இவர் திகழ்ந்தார். இவர் கிளிநொச்சி மாவட்ட சாரதிகள் சங்க செயலாளராகவும், வடமாகாண சாரதிகள் சங்கத்தின் பொருளாளராகவும் இருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தியசாலையில் வைத்தியர்கள், ஊழியர்களோடு மிகவும் ஐக்கியமாகப் பழகி நல்லிடத்தைப் பிடித்த பெருமகன். இவர் **என் கடன் பணி செய்து கிடப்பதே** எனும் மகுடம் தாங்கி மனிதநேயப் பணி, மருத்துவப் பணி, ஆலயப்பணி, சமூகப்பணி என பணிவாழ்வில் தோய்ந்த அமரர் தஜேந்திரன் அவர்கள் மகேசன் தன்பணி செய்ய இவரது கடமை வழியில் கடந்த 10.06.2017 அன்று நோயாளரை ஏற்றிக் கொண்டு வைத்தியர் மற்றும் பணியாளருடன் சென்ற வழியில் எதிர்பாராத விதமாக விபத்து ஏற்பட்டு மரணத்தை தழுவிக் கொண்டார்.

இவரது இழப்பு எவராலும் ஏற்றுக்கொள்ளாததொன்றாகும். தஜேந்திரன் அவர்களது காலடிச் சுவடுகள் அழிந்தாலும், காலச் சுவடுகள் அழியாது. **"உன் பிறப்பு ஒரு சம்பவமாக இருக்கலாம் ஆனால் உன் இறப்பு சரித்திரமாக இருக்க வேண்டும்"** என்ற அப்துல்கலாமின் அமுதச்சரத்தை அமரர் தஜேந்திரன் அவர்களுக்கு மாலையாக அணிவித்து அதனை வணங்கி ஆன்மா இன்பம் துய்க்கவும், அவர் குடும்பம் இடரினும் தளரேல் என வாழவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







தனது காலம் தனில் இறைபணியில்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்கள் நினைவில் உயிர் உருகும் அன்பகலா ஆருயிர் மனைவி

இதயத்துள் இருத்தியெனை
இன்பங்கள் தானளித்து
இனிய நல் இல்லறத்தில்
இங்கிதமாய் வாழ வைத்தீர் - என்னுயிரே

துன்பங்கள் துளியதுவும்
இல்லாது காத்திருந்தீர்
என்னுயிராய் என்றென்றும்
எல்லாமும் தந்திருந்தீர் - என்னுயிரே

இன்றெம்மைத்தான் பிரிந்து
எப்பிடித்தான் வாழுகின்றீர்
அன்பால் அரவணைத்து
அனுதினமும் எமக்காக

என்றென்றும் அயராது
எமக்காய் உழைத்தவரே
உம்மை பிரிந்திங்கே
எப்படி நாம் வாழுவதோ - என்னுயிரே

கணப்பொழுதுள் எல்லாம்
கனவாகிப் போனதுவே
கையெடுத்துக் கும்பிட்ட
கடவுளுக்கும் கருணையில்லை

மணமுடித்த நாள் முதலாய்
மகிழ்வோடு வாழ்ந்திருந்தோம்
மரணம் இது வந்து
வாழ்விழந்து போனதுவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் நினைவோடு
வாழ்வது தான் விதியாமோ
எங்கள் பெரு விளக்கே
ஒளி கொடுத்து காத்திருப்பீர்

திங்கள் மேல் இருந்து
தினமும் குளிர வைத்தீர்
உங்கள் முகம் காணாது
உயிர் உருகி வாடுகின்றேன்

அன்பகலா துணைவி,
சோபா

## மனம் கலங்கி ஏங்கும் பிள்ளைகள்

மீண்டும் நீர் எங்கள்
அப்பாவாய் வர வேண்டும்
அன்பான அப்பாவே
அழுதழுது அலறுகிறோம்
ஆறமுடியவில்லையே
துன்பத்துள் துடிக்கவிட்டு
தூரத்தில் சென்றதுவேன்
துடித்துக்கதறுவது
காதில் வந்து கேட்கலையோ

அன்போடரவணைத்து
அனைத்தும் எமக்காக்கி
என்றும் மகிழ்வோடு
எம்முயிராய் வாழ்ந்தவரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றுங்கள் முகம் காணாது
இதயத்தால் அழுகின்றோம்
என்று இனி வந்தெங்களுக்கு
முத்தங்கள் தந்திடுவீர்

அப்பாவே அப்பாவே
எப்போது உம்மோடு
பிரியாது நாமிருந்தோம் - எமைத்
தனிக்க விட்டு போனதென்ன
அப்பனில்லா வாழ்வு - உப்பில்லாப் பண்டம் என்பர்
எப்படித்தான் அப்பா உமைப் பிரிந்து வாழுவதோ
எப்போதும் எங்களுக்காய்
இரவு பகல் பாராது
முப்பொழுதும் எங்கள் வாழ்வுக்காய் உழைத்தவரே
சற்று நொடிப் பொழுதுள் சகலதுவும் போனதுவே
உற்ற பல தெய்வமெல்லாம் உயிர் பறித்த மாயமென்ன
எப்போதும் உம் நினைவேந்தி
உங்கள் கனவுகளை நிறைவேற்றி வைத்திடுவோம்
எங்களுக்கு என்றென்றும் உங்கள் துணை வேண்டுமப்பா
ஆண்டவனின் பாதம் வேண்டிப் பணிந்தோம்
மீண்டும் நீர் எங்களுக்கு அப்பாவாய் வரவேண்டும்

**பாசத்தைத் தேடும் பிள்ளைகள்,**
**தயூரா, டிதுசன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் பிரிவால் உம்முகம் தேடுகிறது

ஊரெல்லாம் உம் நினைவில்
உயிர் உருகி நின்றனரே
பாரெல்லாம் வந்தும்மை
பணிந்து வணங்கினரே
நீர் இல்லா பணிகள் இனி
நிறைவேறாதொன்றாயே
யாரெல்லாம் வந்துமது
பணிகள் உரைத்தனரே

வருத்தமது பாராது மருத்துவ சேவையில்
மனதார இணைந்து பணி புரிந்தீரே
இரவு பகல் என்று இனிய பொழுதெல்லாம்
இதற்காக அர்ப்பணிதீர்
வரவு செலவென்று எதுவும் பாராது

வாழ்வு ஒரு தொண்டென்று
வாழ்ந்து காட்டி போனீரோ
ஊரிலுள்ள சங்கங்கள், பெரு ஆலயங்கள் யாவுமே
நீர் நின்று உழைத்த பெரு மகனே
போர் நிகழ் காலமது பொறுப்புடனே
பணிபுரிந்தீர்
யாருக்கும் தீங்கில்லா நல்ல மனதாளனே
நேர் நின்று பேசும் தோழமை மிகு மானிடனே
ஊருக்கும் பேரிழப்பு உங்கள் பிரிவென்றென்றும்
பேருக்கு வாழாத பெருந்தகையே நீர் வானுறவீர்

**உற்றார், உறவினர், நண்பர்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவஞானம் சிறீதரன் பா.உ.
M.Ed.,B.A.,PGDE(Me).,Sp.Tr.(Ag)
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்.
882, ஆறுமுகம் வீதி,
வட்டக்கச்சி, கிளிநொச்சி, இலங்கை.
☎ : 021 3207594, 021 2280024
Fax : 021 2222695, 021 2280024
Mobile : 077 6913244
✉ : shritharanmp@gmail.com
● : www.shritharan.com

පාර්ලිමේන්තුව
பாராளுமன்றம்
PARLIAMENT

SIVAGNANAM SHRITHARAN M.P
M.Ed.,B.A.,PGDE(Me).,Sp.Tr.(Ag)
Jaffna Electoral District.
882, Arumugam Road,
Vaddakachchi, Kilinochchi, Sri Lanka.
☎ : 021 3207594, 021 2280024
Fax : 021 2222695, 021 2280024
Mobile : 077 6913244
✉ : shritharanmp@gmail.com
● : www.shritharan.com

# மறையாத மறைவு

ஆழ்கடலைக் கடைந்து தான் அமுதம் எடுத்தோம். ஆனால் இன்று ஆழ்கடலுக்கே அமுதத்தைக் கொடுத்தோம். அமரர் யோகரத்தினம் தஜேந்திரன் அவர்கள் வாழ்வின் நிதர்சனம் இது தான். உயிர்களைச் காவிச்சென்றவனின் உயிர் காவு கொள்ளப்பட்டதை இந்த நிமிடம் வரை நம்ப முடியவில்லை. உலகில் விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலரின் மரணம் நம் இதயத்தில் அல்ல நம் மனங்களில் இரத்தத்தைச் சொட்ட வைக்கின்றது. அமரர் தஜேந்திரனின் மறைவு எம்மனங்களில் மறையாத மறைவாகும்.

வாழ்வினை வேண்டிப் போராடும் எத்தனையோ உயிர்களை அம்புலன்ஸ் வண்டியில் வேகமாகக் கொண்டு சென்று காத்த வள்ளலுக்கு அதே வேகத்தில் உயிர் போகும் விதியை எவன் எழுதி வைத்தான் என எல்லோரும் கேட்கின்றோம் விடை தான் கிடைக்கவில்லை, கிடைக்கவும் போவதில்லை. ஏனென்றால் **"நெருநல் உளனொருவன் இன்றில்லை எனும் பெருமையுடைத்து இவ்வுலகு".**

அமரர். தஜேந்திரன் தனக்கென வாழா பிறருக்கு உரியவர். தனது தொழிலை தொண்டாகக் கருதியவர். அதர்மம் அழிந்து தர்மம் நிலைக்க மகாபாரதத்தில் அருச்சுனனுக்கு கிருஷ்ண பரமாத்மா தேர்ச்சாரதியாக வீற்றிருந்தது போன்று பலிக்களம் புகுந்து வலி சுமந்த கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கு நோயாளர் காவு வண்டி சாரதியாக பலருக்கு வாழ்வு கொடுத்த தஜேந்திரன் தன்னுயிரையே ஆகுதியாக்கியமை சாதாரண நிகழ்வன்று வரலாற்று பதிவு. போர்க்கால சூழ்நிலையில் விமானக்குண்டு வீச்சு, எறிகணை வீச்சு என்பவற்றுக்கு மத்தியில் தன்னுயிரைத் துச்சம் என மதித்து காயப்பட்ட பலரின் உயிரைக் காத்த உத்தம மனிதமாக இவர் திகழ்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்த் தேசிய உணர்வாளராக தேச விடுதலையிலும் தமிழ்த்தேசிய எழுச்சியிலும் அவர் மேற்கொண்ட பணிகளும் ஆழமான சிந்தனைப் பகிர்வுகளும் அவரை இம்மண்ணின் மைந்தனாக எம்முன்நிறுத்தியது. சித்தத்தை இறைவன்பால் வைத்து சைவ பக்தி நெறியில் திளைத்த இவர் கிளிநொச்சி கந்தசாமி கோயில் மற்றும் கணேசபுரம் சித்தி விநாயகர் ஆலயம் என்பனவற்றின் நிர்வாக சபை பொருளாளராகப் பணியாற்றி ஆலயங்களின் வளர்ச்சிக்கு அரும்பணி புரிந்தார். கணேசபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளராக, பொருளாளராக, சமூக மேம்பாட்டிற்கு இவர் ஆற்றிய பணிகள் மகத்தானவை.

**"என்கடன் பணி செய்து கிடப்பதே"** என்னும் மகுடம் தாங்கி மனிதநேயப்பணி, மருத்துவப்பணி, ஆலயப்பணி, சமூகப்பணி என பணி வாழ்வில் தோய்ந்த அமரர் தஜேந்திரன் அவர்களை மகேசன் தன் பணி செய்ய அழைத்துள்ளான் என சாந்தி கொள்வோம். தஜேந்திரன் அவர்களின் **'காலடிச்சுவடுகள் அழிந்தாலும் காலச்சுவடுகள் அழியாது.'**

**"உன்பிறப்பு ஒரு சம்பவமாக இருக்கலாம், ஆனால் உன் இறப்பு சரித்திரமாக இருக்க வேண்டும்"** என்ற அறிவியல் மேதை அப்துல்கலாமின் அமுதச்சரத்தை அமரர். தஜேந்திரனுக்கு மாலையாக அணிவித்து தலைவணங்கி ஆன்மா இன்பம் துய்க்கவும், அவர் குடும்பம் இடரினும் தளரேல் என நலமே வாழவும் இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

**"நாளென ஒன்றுபோற் காட்டி உயிர்ஈரும்**
**வாளாது உணர்வார் பெறின்"**

**பாராளுமன்ற உறுப்பினர்,**



பாராளுமன்ற உறுப்பினர்,
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்,
இணைத்தலைவர் – மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு,
கிளிநொச்சி.

சி.சிறீதரன்,
பாராளுமன்ற உறுப்பினர்,
யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம்,
இல : 882, [illegible]
[illegible], கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைந்தும் மறையாது வாழும் சிறந்த சாரதி தஜேந்திரன்......

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"**

என்ற வள்ளுவரின் கூற்றுக்கு அமைய வாழ்ந்து மறைந்து சிறந்த சாரதி தஜேந்திரன் அவர்களை பாடசாலைக் காலம் தொட்டு எனக்கு நன்றாகத் தெரியும். எல்லோரிடமும் அன்பாகவும் பண்பாகவும் பழகும் சிறந்த மனிதர். இனிமையானவர், உதவும் மனப்பாங்கும் நேர்மையும் கண்ணியமும் கொண்டவர்.

கிளிநொச்சி சுகாதார திணைக்களத்தில் மிக சிறப்பாக கடமையாற்றிய இவர் திடீர் என மறைந்தது எங்கள் எல்லோருக்கும் பெரும் அதிர்ச்சியைத் தந்தது இருப்பினும் அவர் விட்டுச் சென்ற நினைவுகள் எம்மோடு தொடரும்.....

பாடசாலைக் காலத்தில் அறிமுகமாகிய மறைந்த தஜேந்திரன் பின்னாளில் பொறுப்பு வாய்ந்த சாரதியாக கிளிநொச்சி சுகாதார திணைக்களத்தில் பணியை ஏற்றுக் கொண்டார். கடமையை ஏற்றுக் கொண்ட நாளில் இருந்து வாகனங்களை கவனமாக பராமரித்து வந்தார். இவரோடு பிரயாணம் செய்யும் போது வாகனத்தினை குறிப்பிட்ட அளவு வேகத்தில் மாத்திரம் செலுத்துவார். எப்போதும் நீதியையே கதைப்பார். அத்துடன் இக்கட்டான சூழ்நிலைகளில் மிக சிறப்பாகவும் புத்திசாலித்தனத்துடனும் வாகனத்தைச் செலுத்தி பல உயிர்களை காப்பாற்றியும் உள்ளார்.

தனது கடமை தவிர்ந்து பொது வாழ்க்கையிலும் ஈடுபட்டு வந்தார். இவருடைய பொது வாழ்க்கையில் கடவுள் நம்பிக்கை கொண்டவராக காணப்பட்டார். இவர் பெரும்பாலான ஓய்வு காலப்பகுதியினை கோவில்களிலே செலவழித்ததை காணக்கூடியதாக இருந்தது. இறுதிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தில் கிளிநொச்சி முருகன் கோவில் பொருளாளராக கடமையாற்றியதோடு திருவிழா காலங்களில் ஆலய பரிபாலன சபையினருடன் சேர்ந்து திருப்பணிகளை மிகவும் பக்தியுடனும் ஆர்வத்துடனும் செய்வதை காணக்கூடியதாக இருந்தது. இவர் கடவுள் மீதும் சைவசமயத்தின் கோட்பாடுகள் மற்றும் கொள்கைகள் மீதும் மிகுந்த நம்பிக்கையும் பக்தியும் கொண்டவர்.

பிறப்புண்டேல் இறப்புண்டு அதனை வெல்ல யாராலும் முடியாது மறைந்த சிறந்த சாரதி தஜேந்திரன் அவர்களின் செயல்களை மனதிலிருத்தி அவரின் ஆத்மா ஈடேற்றத்திற்காக பிரார்த்திக்கின்றேன்.

சாந்தி! சாந்தி! சாந்தி!

**வைத்தியகலாநிதி த.சத்தியமூர்த்தி,**
**பணிப்பாளர்,**
**யாழ் போதனா வைத்தியசாலை,**
**யாழ்ப்பாணம்.**

**நீ எதை செய்தாலும்**
**அதன் பொருட்டு**
**உனது மனம், ஆன்மா**
**முழுவதையும்**
**அர்ப்பணித்துவிடு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதருள் மாணிக்கம்

அமரர் யோகரத்தினம் தஜேந்திரன் அவர்கள் யாழ்ப்பாணம் ஏழாலைப் பகுதியைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்தாலும், எழில் மிகு வளம் கொழிக்கும் கிளிநொச்சி கணேசபுரத்தினை தனது நீண்ட கால நிரந்தர வதிவிடமாகக் கொண்டிருந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை கிளி / புனித திரேசா பெண்கள் கல்லூரியிலும் கற்றுத் தேர்ந்தார்.

இளமைப் பருவத்திலேயே துடிப்புள்ள இளைஞராகவும் தலைமைத்துவ பண்புகளையும், ஒரே நேரத்தில் பல விடயங்களை கையாளக்கூடிய ஆளுமை மிக்க ஒரு மனிதராகவும் திகழ்ந்தார். இப்பண்புகள் இவரைப் பின்னைய நாட்களில் சிறந்த தனித்துவம் மிக்க ஒரு மனிதராக உருவாகக் காரணமாக அமைந்தன.

இரண்டாயிரத்து ஓராம் ஆண்டு காலப்பகுதியில் இவர் தன்னை ஒரு சாரதியாக கிளிநொச்சி சுகாதாரத் திணைக்களத்தோடு இணைத்துக் கொண்டார். அக்காலம் முதற்கொண்டு அவர் அமரத்துவம் அடையும் வரையும் எங்களுடைய திணைக்களத்திலேயே அவர் பணியாற்றி வந்தார். சுகாதாரத் திணைக்களத்தின் பல்வேறு பிரிவுகளில் அவர் சாரதியாகக் கடமையாற்றியிருந்தாலும் உயிர் காக்கும் பெரும்பணியாம் நோயாளர் காவு வண்டியிலேயே நீண்ட காலமாக பணியாற்றியிருந்தார். வாகனங்களை நேர்த்தியாகப் பராமரிப்பது, வாகனங்களை பாதுகாப்பாகவும் அவதானமாகவும் செலுத்துவது, சக பணியாளர்களுடன் உறவுமுறை, நோயாளர் நலன் போன்ற விடயங்களில் முழுச்சிரத்தையோடு நடந்து கொண்டார்.

இவரது வாழ்க்கைக் குறிப்பின் பல்வேறு படிகளில் சமூகப்பணியும் ஒன்றாகக் கலந்துள்ளது. யுத்தத்தின் பின்னரான மீள்குடியேற்றக் காலப்பகுதியில் தனது அழகிய, சிறிய கிராமத்தினை மீளக் கட்டியெழுப்புவதில் அன்னாரின் பங்கு அளப்பரியது. வீதி அபிவிருத்தி, பொதுக் கட்டடங்கள், ஆலயப்புனரமைப்பு என்று ஆரம்பித்து அக்கிராமத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களின் வாழ்வாதார மேம்பாடு வரைக்கும் இவரது பங்களிப்பு பதிந்துள்ளது.

இவரது வாழ்க்கைக் குறிப்பின் மற்றுமொரு பரிணாமமாக ஆன்மீகத் தொண்டு அமைந்துள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தின் அடையாளமாக விளங்கும் வரலாற்றுச் சிறப்பு மிக்க கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்தின் பரிபாலன சபையில் நீண்ட காலமாக முக்கிய உறுப்பினராக கடமையாற்றினார். மேற்படி ஆலயத்தின் இராஜகோபுரப் பணிகளிலே அன்னாரின் பங்கு அளப்பெரியது. அதுவே அவர் வாழ்வின் ஈடேற்றமாகவும் அமைந்துள்ளது.

அன்னார் பொதுவாகவே மிக நேர்த்தியாகவும் அவதானத்துடனும் வாகனங்களை செலுத்த வல்லவர். வீதி விபத்துக்கள் சம்பந்தமாக அதிக விழிப்புணர்வோடு செயற்படுபவர். தனது சக பணியாளர்களுக்கும் இது சம்பந்தமான அறிவுரைகளை கூறி வருபவராகத் திகழ்ந்தார். விதி யாரைத்தான் விட்டு வைத்தது துரதிஸ்டவசமாக நடந்த அந்தச் துயரச் சம்பவம் எங்கள் தஜேந்திரனை எங்களிடமிருந்து நிரந்தரமாகப் பறித்துச் சென்றது. அன்னார் மறைந்தாலும் தனது பல்துறை சார்ந்த சேவைகளால் எங்கள் அனைவரது மனங்களிலும் **"மனிதருள் மாணிக்கம்"** ஆக வாழ்ந்து கொண்டிருக்கின்றார். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்.

சாந்தி! சாந்தி! சாந்தி!

**வைத்தியகலாநிதி,**
**மா.ஜெயராசா,**
**கிளிநொச்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவில் நீங்காதவர்

அமரர் யோகரத்தினம் தஜேந்திரன் என்றவுடன் எமது மனக் கண்ணில் வருவது அவரது கம்பீரமான தோற்றமும் குழந்தை முகமும் தான். அவரை இழந்து விட்டோம் என்பது எம்மால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

அன்னார் என்றுமே சோர்ந்திருந்து சோம்பேறியாகக் காலம் கடத்தியதில்லை. எந்நேரமும் கோயில் வேலைகள் பற்றிய சிந்தனையுடனும் தனது வேலை சம்பந்தமான அலுவல்களிலும் ஈடுபட்டுக் கொண்டிருப்பார். அவர் ஊரவர்க்கும் அயலவர்க்கும் மிகவும் விருப்பத்திற்குரியவர். எமது ஆலயத்தில் பொருளாளராகத் திகழ்ந்தவர். வேலையாட்களுடன் கண்டிப்பாகவும் அதே வேளையில் மிகவும் அன்பாகவும் நடந்து கொள்வார். இத்தகையவரின் உயிர் காலனவன் விரைந்துவரக் கடவுள் கூடக்கையை விட காவு போனதுவே.

அனைவரது மனங்களிலும் அன்புடன் விளங்கிய அன்னாரது இழப்பை எவராலும் ஏற்க முடியாது. அன்னார் எமது முருகன் ஆலயத்தின் வளர்ச்சிக்கும் ஆலய விசேட பூசைக் காலங்களிலும் பொருளாளர் என்ற வகையில் தன்னாலான தொண்டுகளாற்றி ஆலய வளர்ச்சியை மேலோங்கச் செய்தவராவார். அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா முருகப் பெருமானின் பாதாரக் கமலங்களில் சென்று சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

ஆலய பரிபாலன சபை,
கந்தசுவாமி கோயில்,
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சம் நிறைந்த தம்பி

**"நெருநல் உளனொருவன் இன்றில்லை எனும்**

**பெருமை படைத்து இவ்வுலகு"**

என்ற குறளுக்கு சிரஞ்சீவித் தன்மையை தந்து விட்டு அமரராகி விட்ட எனது அன்புத் தம்பி தஜேந்திரன் (பபா) என்பவர் வளமான கிளிநொச்சி நகரில் கணேசபுரம் பகுதியில் வாழ்ந்தவர். இளமைக் காலத்தில் கற்பன கற்று ஒழுக்க சீலராகவும் அமைதி, விடாமுயற்சி என்பவற்றை தன்னகத்தே கொண்டு விளங்கினார். எப்பணியை எடுத்துக் கொண்டாலும் அதனை சிறப்பாக செய்து முடிக்க வேண்டும் என்ற பேரவாவுடன் செயற்படுவார். கிளிநொச்சி கணேசபுரம் சர்வார்த்த சித்தி விநாயகர் ஆலயத்தின் செயலாளராக பெரும்பணி புரிந்ததுடன் கிளிநொச்சி கந்தசுவாமி கோவிலின் பொருளாளராகவும் பணியாற்றினார். அத்துடன் கிராமத்தின் சனசமூக நிலைய நடவடிக்கைகள் மற்றும் கிராம அபிவிருத்தி நடவடிக்கைகளில் முன்நின்று செயற்பட்டார்.

ஒரு மனிதனின் மரணத்தின் பின்பு தான் அவரது மகிமை புரியும். இவரது இழப்பானது எமக்கு மட்டுமல்ல இந்த கிளிநொச்சி மாவட்டத்திற்கே பேரிழப்பாகும். இவரது சமய சமூக பணிகளையும் பொருளாதார மேம்பாட்டு பணிகளையும் நாம் இலகுவில் மறந்து விட முடியாது.

**" குடம்பை தனித்தொழிய புட்பறந்தற்றே**

**உடம்பொகு உயிரிடை நட்பு"**

என்ற வள்ளுவரின் குறள் மணிக்கமைய அவரின் துயரத்தை தழுவுவதே தக்க செயல்.

இவரது ஆத்மா எம்பெருமானின் பாதார விந்தங்களை சென்றடையும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

**கி.விஜேந்திரா,**

**தலைவர் - சர்வார்த்த சித்தி விநாயகர் ஆலயம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மாவின் குமுறல்

கடவுளே என்னை ஏன் இடையில் பறித்துக் கொண்டாய்
மக்களின் பணிக்காய் பல எண்ணங்கள் கொண்டிருந்தேன்
கிளி கந்தனுக்கான எனது பணிகள் இன்னும் முடிவுறவில்லையே
கல்யான மண்டப நினைவுகள் என் மனதினிலே ஓயாது
என் மனையாள் பிள்ளைகளின் அன்பிலிருந்த
என்னை ஏன் பாதியினில் பறித்துக் கொண்டாய்
என் குடும்பத்தின் மீது கொண்ட அன்பை விட
கந்தனே உன் மீது அதிக அன்பு வைத்ததாலோ

என்னை உன்னருகில் எடுத்துக் கொண்டாய்
சக சாரதிகளின் நலனுக்காய் நான்
ஆற்றவிருந்த சேவைகள் அழப்பெரியது
அப்பணியினை தொடர விடாது எனது மூச்சினை நிறுத்தி விட்டாயே
நோயுள்ளவர்களின் உயிரைக் காக்கும்
உண்ணத பணியிலிருந்த வேளையில்
இடைநடுவில் பறித்துக் கொண்டாயே
கந்தனே எனது பணிகளை முடிக்காமல்
வீதியிலே விட்டு வந்து விட்டேனே என

எனது ஆத்மா குமுறிக் கொண்டே இருக்கும் **"இறந்தும் மக்கள் மனங்களில் வாழ்பவன் தான் மாமனிதன் அதில் நீ ஒருவன்"** அன்பின் வவா உனது ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

**சகசாரதிகள்,**
**சுகாதார சேவைகள் சாரதிகள் சங்கம்,**
**கிளிநொச்சி மாவட்டம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணேசபுர சனசமூக நிலைய
# மக்களின் ஆதங்கம்

1993ம் ஆண்டு முற்பகுதியிலே கணேசபுரம் சனசமூக நிலையம் புதுப் பொலிவுடன் இயங்க ஆரம்பித்தது. அவ்வேளையில் தான் கிராமம் இனம் கண்டது ஓர் சமூக சேவையாளனை. விளையாட்டுப் போட்டி, அதிஸ்டலாபச் சீட்டிழுப்பு, பரிசளிப்பு நிகழ்வு, கலை விழா போன்றவற்றை திறம்பட நடாத்த முன்னின்று செயற்பட்டவர் யோ.தஜேந்திரன் (பவா)

தொடர்ந்து சற்றும் தளராது கணேசபுரம் சர்வார்த்த சித்தி விநாயகர் ஆலயம், கிராம அபிவிருத்திச் சங்கம் போன்ற கிராம சமூகமயமான அமைப்புகளிலும் கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி ஆலயத்திலும் அவரது பணி தொடர்ந்தது.

எதைச் செய்தாலும் சரியாகச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர். எவர் எது சொன்னாலும் குறிப்பிட்ட பணியை தனியாளாக செய்து முடிக்கும் ஆற்றல் மிக்க ஒரு தம்பியை, நண்பனை, சமூக சேவையாளரை இழந்து நிற்கும் சமூகத்தில் கணேசபுரம் சனசமூக நிலையத்தின் முன்னைநாள் நிர்வாகமும் ஒன்றாகும்.

**தலைவர், செயலாளர்,**<br>**முன்னைநாள் சக உறுப்பினர்கள்,**<br>**கணேசபுரம் சனசமூக நிலையம்,**<br>**கிளிநொச்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தஜேந்திரனுக்கு தயவான இதய அஞ்சலி

எம்மோடு பழகி எமக்கு உதவி செய்து, ஒரு சிறந்த சமூகத் தொண்டனாகப் பிரகாசித்து மறைந்து போன அன்பு மிக்கத் திருவாளர் அமரர் தஜேந்திரன் வாழ்வுப் பக்கங்களைப் புரட்டிப் பார்த்தால் அவை யாவும் மிகவும் பிரமிக்கத்தக்கவையே.

இவர் தன் கிராமத்திலும் ஆலயங்களிலும் வைத்திய சாலையில் தான் செய்த சேவைகளிலும் சிலவற்றையே நாம் எடுத்துப் பரீட்சித்துப் பார்த்தோம். என்ன வியப்பு என்ன அதிசயம் என்ன அவரின் சிறப்பு என்று கூறத்தான் தோன்றும். கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்தின் வளர்ச்சியும் அதன் மேம்பாடு பற்றியும் பேசுவார். இவர் அவ்வாலயத்தின் பொருளாளராக அங்கம் வகித்துச் செய்த செயற்பாடுகள் என்றும் எங்கும் எவர் மனத்திலும் முத்திரை பதித்து நிலைத்து நிற்கும் என்பதற்கு ஐயமேயில்லை.

எனது விபத்துக் காலச் சிகிச்சையின் போது என்னை வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் உள்ள வைத்திய சாலைகளுக்குக் கிளிநொச்சியிலிருந்து நோயாளர் காவு வண்டியில் மிகவும் அவதானமாகவும் கவனமாவும் அன்பாகவும் ஏற்றி இறக்கிய நினைவுகள் நிலைத்து நிற்கும். இவ்வாறே அவர் ஏனைய நோயாளிகளையும் கவனிப்பவர் என்பது உண்மை. எவரும் எதிர்பாராமல் நடைபெற்ற இவரது கவனமான கடமையின் போதான விபத்தானது மிகவும் கொடூரமான ஏற்றுக் கொள்ள முடியாத நிகழ்வாகும். ஒரு மனிதன் வையத்துள் வாழ்வாங்கு வாழுங்கால் இப்படிப்பட்ட நிகழ்வுகள் ஏற்பட்டால் எல்லோராலும் தாங்க முடியாது. இவருக்கு எனது ஆத்ம அஞ்சலிகளைச் செலுத்துகின்றேன்.

எது எப்படியிருப்பினும் பிறந்தவர் என்றோ இறப்பது என்ற வரிசையில் இணைந்து கொண்ட அமரர் திரு.தஜேந்திரன் அவர்களை எண்ணுகிறேன் வருந்துகிறேன். அவரின் ஈடற்ற இழப்பில் சிக்குண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவிக்கும் மனைவி, பிள்ளைகள், உறவினர்களுக்கு எனது நீண்ட ஆழமான அனுதாபம் உரித்தாகட்டும்.

**"புவியிற் தோன்றிய பிறப்புக்களெல்லாம்**
**கவியிற் சொல்கிறேன் காலனாற் கவரப்பட்டு**
**புரவியிற் சென்று பேருலகை நீக்கி விட்டு**
**பவித்திரமாய்ப் பரமனடி சென்றாயோ"**

**ஓம் சாந்தி**

இவ்வண்ணம்,
க.மகேந்திரன்,
128, ஸ்கந்தபுரம்,
கிளிநொச்சி.

**உனது இதயத்தில் நேர்மை இருந்தால்**
**உனது நடத்தையில் அழகு இருக்கும்!**

**உன் நடத்தையில் அழகு இருந்தால்**
**வீட்டில் அமைதி இருக்கும்!**

**வீட்டில் அமைதி இருந்தால்**
**நாட்டில் அமைதி நிலைக்கும்!**

**நாட்டில் அமைதி இருந்தால்**
**உலகில் சமாதானம் பிறக்கும்!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளத்தால் உயர்ந்த உத்தமனைத் தேடுகின்றோம்.....



## "வெள்ளத்தனையது மலர்நீட்டம் மாந்தர்தம் உள்ளத்தனைய உயர்வு"

என்பது வள்ளுவர் வாக்கு குளத்தில் மலரும் தாமரை மலரானது தனது காம்பை உயரமானதாக்கி நீரின்மேல் மலர்ந்து நிற்கின்றதோ அதேபோல் ஒரு மனிதனின் உள்ளத்து சிந்தனைக்கு ஏற்ப அவனது உயர்வு இருக்கும் என்பது யதார்த்தம். இதற்கு ஒப்பான உயர்ந்த உள்ளம் படைத்தவன் தான் எம்மோடு உண்டு, உறவாடி எம் இன்பதுன்பங்களில் கைகொடுத்த வவா அவர்கள் "தனக்கென வாழா பிறர்க்குரியாளன்" இவன் எத்தகை பணியினைதான் ஏற்றாலும் அத்தனை பணியையும் பொறுப்புணர்வோடும் கடமையுணர்வோடும் செய்து முடிக்கும் ஆற்றல் இவனுக்கேயுரியது எமது ஸ்தாபனத்திற்கு அடிக்கடி வந்து தனது பொறுப்புக்களை செவ்வனே செய்து முடிப்பதற்கான தகவல்களை அச்சிட்டப்போது இவருடைய நேர்மைத்தனத்தையும், கடமையுணர்வையும் நாம் கண்கூடாக கண்டுகொண்டோம். இவருடைய நடவடிக்கைகள் அனைத்தும் ஒரு மனிதன் "எப்படியும் வாழலாம் என்பதல்ல" இப்படித்தான் வாழவேண்டும் என்பதை பல சந்தர்ப்பங்களில் எமக்கு உணர்த்துவதாக அமைந்தது.

தனது சேவை தான் வாழும் கிராமத்திற்கு மட்டுமல்ல மாவட்டத்திற்கு மட்டுமல்ல இலங்கைவாழ் மக்களுக்கே தேவை என்பதை உணர்ந்து தனது வயதுக்கு அப்பாற்பட்டு பல சேவைகளை செய்ததுமட்டுமல்ல எத்தனையோ உயிர்களைக் காத்த கடவுளாக உயிரபிச்சை கொடுத்த உத்தம மகானாக உன்னை நினைத்து நினைத்து தேடுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு நோயாளர் காவு வண்டியின் சாரதி ஆசனத்தை எட்டிப் பார்த்த கண்கள் இன்று பார்வையிழந்து விட்டன பலஉயிர்களைக்காக்க ஓடிய உன்னை உன் உயிர்காக்க நாம் என்ன செய்தோம்.

கிளிநொச்சி கந்தசுவாமி கோவிலின் உயர்ந்த கோபுரத்தையும் உனது உயர்ந்த உள்ளத்தையும் அண்ணாந்து பார்த்து அங்கலாய்த்து தேடுகின்றோம் உன் வதனமதை. பூவுலகின் உம் பணி போதுமென்று என்னருகே வந்திருந்து என்பணி செய்யென்று அழைத்த அந்த இறைவனே மறுபிறப்பு உண்டெனில் இந்த மகான் மீண்டும் எம் மண்ணில் உயிர்த்து அவர்பாதியில் விட்டுச் சென்ற குடும்பத்துக்காக நீண்டகாலம் உயிர்வாழ வரமருள வேண்டுமப்பா...

**ஓம்சாந்தி! ஓம்சாந்தி!! ஓம் சாந்தி!!!**

**உரிமையாளர், பணியாளர்கள்**
**வேழன்பதிப்பகம்.**

**நமது பிறப்பு**
**ஒரு சம்பவமாக**
**இருக்கலாம். ஆனால்**
**இறப்பு ஒரு சரித்திரமாக**
**இருக்க வேண்டும்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணையா உறவு தீபம்

மனிதர்கள் எவ்வாறு வாழ வேண்டும் என வாழ்ந்து காட்டிய அமரர் யோகரத்தினம் தஜேந்திரன்.

கணேசபுரம் கிராமத்தில் வாழ்ந்து அங்கத்துவ தகுதி பெறும் வயதில் கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் உறவுப்பாலத்தில் தன்னையும் ஒருவனாக இணைத்துக் கொண்டார். இவர் தனது சேவையினால் இளவயதிலேயே கிளைக்குழு உறுப்பினராகவும் பொதுச்சபை உறுப்பினராகவும் செயற்பட்டு சங்கம் வளர்ச்சியடைய வேண்டும், மக்களுக்கு சேவையாற்ற வேண்டும் என்ற சிந்தனையில் எப்போதும் தொடர்புகளை ஏற்படுத்தி வாழ்ந்தவர். உண்மையும் நேர்மையும் இறைபக்தியும் கொண்ட சிறந்த சேவையாளன் புன்னகையுடன் குறையினை சுட்டிக் காட்டி தனது கருத்துக்களால் உண்மையை வெளிப்படுத்தும் ஆற்றலும் பாதிக்கப்படுபவர்களுக்கு பணி செய்யும் பண்பும் கொண்டு எல்லோராலும் பபா என அன்போடு அழைக்கப்பட்டு வந்தவர். உயிர் காக்கும் பணியில் ஒருவனாக இருந்து விதியின் கையில் உயிர் நீத்த ஒருவனாவான். இவனது சிந்தனைகள் எப்போதும் எம் உறவுக்குள் அணையாத தீபம்.

**"ஒரு மனிதன் எவ்வளவு காலம் வாழ்ந்தான் என்பது அல்ல அவன் வாழ்ந்த காலத்தில் என்ன செய்தான் என்பதே நினைவில் நிற்கும்"**

ஆத்மா சாந்தியடைய என்றும் பிரார்த்திக்கின்றோம்.

**திரு.செ.பாலேந்திரன்,**
**பொதுமுகாமையாளர்,**
**கரைச்சி தெ.ப.நோ.கூ.சங்கம்(வ.து)**
**கிளிநொச்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்ணிற் பறந்ததேனோ.......

இளவயதுப் பறவை
விழிமூடித் துயிலிறது
ஒளி தந்த சுடர் ஒன்று
விரைவினிலே அணைந்ததுவே
தொண்டனே நண்பனே
நானிலம் மதிப்பவனே
வண்ண முகத்தவனே
பபா என்ற வல்லவனே



கணேசபுரப்பகுதியில்
மைந்தனாய் நீ மலர்ந்தாய்
செயல் மிகு வீரனாய்
பணிகள் ஆற்றி நின்றாய்
விழி மூடித் துயிலும் உன்னை
பார்க்க மனம் பதைக்கிறது
ஒளி மிகுந்த உன் ஊரும்
இருளினிலே மூழ்கிறது
தொண்டனே நண்பனே
நானிலம் பதிப்பவனே
வண்ண முகத்தவனே
பபா என்ற வல்லவனே

கிளிநொச்சிக் கந்தனை
தோளிலே நீ சுமந்தாய்
அருள் நிறை சந்நிதியில்
பொருளாளர் ஆகிநின்றாய்
ஆலயக் கோபுரம்
அமைத்திட வழி சமைத்தாய்
அழகான கல்யான மண்டபம்
தொடக்கி வைத்தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தியசாலையிலே
நித்தியம் பணி புரிந்தாய்
உயிர் காக்கும் சாரதியாய்
உலகம் சுற்றி வந்தாய்
நீ புரிந்த தொழில்
உனக்கு எமனாக மாறியதோ
பாவி எமன் நின் உயிரை
பாதியிலே கவர்ந்தானோ

கணேசபுர மண்ணின்
காவலன் மரணித்தான்
கருணை நிறைந்தவன்
சடுதியில் சயனித்தான்

உற்ற உன் மனையாளும்
மழலைகளும் தவிக்கின்றார்
உன் உயிர்த் தோழர்கள்
உனை இழந்து வாடுகின்றார்
தொண்டனே நண்பனே
நானிலம் மதிப்பவனே
வண்ண முகத்தவனே
பபா என்ற வல்லவனே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனசாட்சிக்கு பயந்து நட

வாய்விட்டு உரக்கத்தான் ஈசுவரனைப் பிரார்த்திக்க வேண்டும் என்பதில்லை. உனக்கு எப்படி இஸ்டமோ அப்படி பிரார்த்தனை செய்யலாம். அவன் எப்போதும் உன் பிரார்த்தனையை நிச்சயமாக கேட்பான். எறும்பின் காலடி சத்தம் கூட அவனுடைய காதுகளில் கேட்கும்.

பிரார்த்தனையால் வாஸ்தவமான பலன் உண்டு. மனம் வாக்கும் ஒன்று சேர்ந்து ஊக்கத்தோடு ஏதேனும் ஒரு பொருளை பிரார்த்தித்துக் கேட்குமானால் அந்தப்பிரார்த்தனைக்கும் பலன் கிடைக்கும். **"ஈஸ்வரா. இவை எல்லாம் உன்னுடையவை"** என்று வாயால் சொல்லி அவையெல்லாம் தன்னுடையவை என மனதால் நினைக்கிறவனுடைய பிரார்த்தனைக்கு பலன் உண்டாகாது.

உனது நெஞ்சுக்கு துரோகம் செய்யாதே. மனசாட்சியின் படி நட. நிச்சயமாக உனக்கு ஜெயம் உண்டாகும். கள்ளம் கபடமற்ற உள்ளத்தோடு பிரார்த்தனை செய். ஈசுவரன் கேட்பான்.

வீடு, வாசல், குழந்தை, குட்டிகள், குடும்பம் இவைகள் எல்லாம் சிறிது காலம் வரைக்கும் தான் நமக்கானவை. பிறகு நம்மை விட்டு பிரிந்து விடும். அவை அநித்திய வஸ்துக்களாகும். ஈசுவரன் ஒருவன் தான் நித்தியம். ஒன்றிரண்டு பழங்கள் விழுந்து விடுவதாலேயே ஒன்றும் போய் விடாது. நித்தியமான பனைமரம் இருக்கிறதல்லவா? ஆகவே கவலைப்பட அவசியமில்லை.

நெஞ்சில் உள்ளதையே வாயால் சொல்லு. எனது சொல்லுக்கும் நினைவுக்கும் அத்தியந்த ஒற்றுமை இருக்கட்டும் உன் மனம் உலகத்திலேயே உழன்று கொண்டிருக்கும் போது **"எல்லாம் ஈசுவரனே"** என்று வாயால் மாத்திரம் சொல்லிக் கொண்டிருந்தால் உனக்கு யாதொரு நன்மையும் உண்டாகாது.

தாயும், தந்தையும் மிகவும் முக்கியமானவர்கள். அவர்களை திருப்தி படுத்தினால் ஒழிய ஒருவனுக்கு பக்தி சாதனைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயனைத்தராது. ஆதலால் தான் ஈசுவர பிரேமையால் பித்தேறிய சைதன்ய சுவாமிகள் கூட தாம் சன்யாசம் பெற்றுக் கொள்வதற்கு முன்னால் தமது தாயைச் சமாதானப்படுத்துவதற்கு வெகு சிரமப்பட்டார்.

**"தாயே, வருந்த வேண்டாம் அடிக்கடி தங்களைப் பார்க்க வருவேன்"** என்று அவர் வாக்களித்தார். தேவர்களின் கடன், ரிஷிகளின் கடன், பெற்றோர்களின் கடன், மனைவியின் கடன் முதலிய பல கடன்களை மனிதன் தீர்க்க வேண்டியிருக்கிறது. பெற்றோர்களின் கடனைத் தீர்த்தால் ஒழிய சத்கருமங்கள் பலிக்காது. ஆனால் இங்கு ஒரு விசயம் கவனிக்க வேண்டியிருக்கிறது. தெய்வப் பைத்தியம் பிடித்தவனுக்குத் தாயார் யார்? தந்தை யார்? மனைவி யார்? என்பது புரிவதில்லை. கடவுளிடம் வைக்கும் அபார அன்பினால் அவன் பைத்தியம் கொள்கிறான். அந்நிலைமையை அடைந்த மனிதன் உலகத்தையே மறந்து விடுகிறான். இப்படி பட்டவன் மட்டுமே எந்தக் கடனையும் செய்ய வேண்டுமென்பதில்லை.

பெற்றோர் மனிதனுக்கு கண்கண்ட தெய்வம். அவர்கள் உயிரோடு இருக்கும் வரையில் ஒவ்வொருவனும் தன்னாலான அளவு அவர்களுக்குச் சேவை செய்ய வேண்டும். இறந்து போன பெற்றோர்களுக்குச் செய்ய வேண்டிய சடங்குகளை செய்ய முடியாதபடி பரம ஏழையாக ஒருவன் இருப்பானானால் அவன் காட்டிற்குச் சென்று தனி இடத்தில் தன்னுடைய சக்தியற்ற நிலையை நினைத்துக் கண்ணீர் உருக்க வேண்டும். அப்போது தான் அவர்களுக்குச் செய்ய வேண்டிய கடன் நீங்கும்.

பகவத் பக்திக்காக வேண்டுமானால் ஒருவன் பெற்றோரையும் நிராகரித்து விடலாம். உதாரணமாக பிரகலாதனையும் துருவனையும் சொல்லலாம். தன் தகப்பன் எவ்வளவு தடுத்தும் கேளாது பிரகலாதன் ஹரிநாமத்தை உச்சரித்து

வந்தான். தாயின் சொல்லையும் மீறி காட்டுக்கு தவம் செய்ய சென்றான் துருவன் அவர்கள் பிழை செய்தவர்கள் அல்லர். நீங்கள் நன்மையென்று நினைத்து செய்த செயலால் ஒருசிலர் உண்மையாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்மை பெற்றிருக்கலாம். அதே நேரத்தில் மேலும் சிலர் அச்செயலால் சில தீமைகளை அடைந்திருக்கலாம். இதனால் நீங்கள் செய்த நற்செயல்கூட பயனற்றதாகிவிடும். எனவே ஒவ்வொரு முறையும் நற்செயல்கள் செய்யும் முன்பு நாம் செய்வது சரியானது தானா? அதனால் யார் யார் பயன் பெறுவார்கள்? இது உண்மையிலேயே அவர்களுக்கு பயன் தருமா? இதனால் அவர்களது வாழ்க்கையில் முன்னேற்றம் உண்டாகுமா? என அலசி ஆராய்ந்து பாருங்கள். அதன் பின் ஒரு முடிவுக்கு வந்து அதற்கேற்ப உங்களது செயல்களை மேலும் மேன்மைப்படுத்துங்கள்.

அன்பே சிவம்

நல்லவன் படகில் போகும் போது
துடுப்பு தண்ணீருக்குள் மூழ்கி விட்டால்
நதியே திசை மாறி
அவன் சேர வேண்டிய இடத்தில்
கொண்டு போய்ச் சேர்த்து விடும்.

**கண்ணதாசன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தனது அலுவலகத்தில்.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிவலிங்க தியான அர்ச்சனை மாலை

## தியானம்

தவளமய சரீரம் சர்ப்பசூலாஹ பாசம்
பரசுமநல கண்டம் கண்டகம் வஜ்ரயுத்தம்
அபயவரத கஸ்த்தம் பஞ்சவக்த்ரம் திரிநேத்ரம்
நதிசசி மௌலி சோபாலிங்க மூர்த்திம் நமாமி.

ஓம் சிவலிங்காய நமக
ஓம் அற்புதலிங்காய நமக
ஓம் அனுகத லிங்காய நமக
ஓம் அவ்யக்த லிங்காய நமக
ஓம் அர்த்த லிங்காய நமக
ஓம் அச்சுத லிங்காய நமக
ஓம் அநாகத லிங்காய நமக
ஓம் அநந்த லிங்காய நமக
ஓம் அகிலேச லிங்காய நமக
ஓம் அந்தக நாசக லிங்காய நமக
ஓம் அந்தக சம்கார லிங்காய நமக
ஓம் அகநிதகுண லிங்காய நமக
ஓம் அதர்வ லிங்காய நமக
ஓம் அஷ்டதிகஸ்வரபூஜித லிங்காய நமக
ஓம் அனாதி லிங்காய நமக
ஓம் அகோர லிங்காய நமக
ஓம் அப்பு லிங்காய நமக
ஓம் அமிர்த லிங்காய நமக
ஓம் ஆதி லிங்காய நமக
ஓம் ஆநந்த லிங்காய நமக
ஓம் ஆசிறித ரக்ஷக லிங்காய நமக
ஓம் ஆர்ச்சிதபாப விநாச லிங்காய நமக
ஓம் ஆகம லிங்காய நமக





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஓம் ஆகாச லிங்காய நமக
ஓம் இந்து கலாதர லிங்காய நமக
ஓம் இந்ர சாப விமோசன லிங்காய நமக
ஓம் ஈசலிங்காய நமக
ஓம் ஈசாந லிங்காய நமக
ஓம் உரக விபூசண லிங்காய நமக
ஓம் ஊர்த்வ லிங்காய நமக
ஓம் இருக்வேத சுருதி லிங்காய நமக
ஓம் இலுவந்திய லிங்காய நமக
ஓம் லூதபவபாச லிங்காய நமக
ஓம் ஏக லிங்காய நமக
ஓம் ஐஸ்வர்ய லிங்காய நமக
ஓம் ஓங்காரதிப லிங்காய நமக
ஓம் ஔர சலாலாலித லிங்காய நமக
ஓம் அம்புஜாச நஸ்துத லிங்காய நமக
ஓம் அக்ஷணதோஜா லிங்காய நமக
ஓம் கனக லிங்காய நமக
ஓம் கருணாலய லிங்காய நமக
ஓம் காசி லிங்காய நமக
ஓம் காந்திமதிப்பிரிய லிங்காய நமக
ஓம் கேதீச லிங்காய நமக
ஓம் கோணேச லிங்காய நமக
ஓம் குமார லிங்காய நமக
ஓம் கண்டபரசு மிருகடங்கதநுர்தர லிங்காய நமக
ஓம் கங்காதர லிங்காய நமக
ஓம் கண லிங்காய நமக
ஓம் கிரீச லிங்காய நமக
ஓம் குணகித லிங்காய நமக
ஓம் கண லிங்காய நமக
ஓம் கண்டாநாதபிரிய லிங்காய நமக
ஓம் ஙப்பிரிய லிங்காய நமக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சந்தண லேபந லிங்காய நமக
ஓம் சிதம்பர லிங்காய நமக
ஓம் சின்மய லிங்காய நமக
ஓம் சத்திரி கிறுதயதோ லிங்காய நமக
ஓம் சின்னபாப கிறுதயதோ லிங்காய நமக
ஓம் ஜல லிங்காய நமக
ஓம் ஜோதி லிங்காய நமக
ஓம் ஜரிதாசேசக்ஷபாதக லிங்காய நமக
ஓம் ஞான லிங்காய நமக
ஓம் ஞானக் ஞான விநாச லிங்காய நமக
ஓம் டங்கி தாகிலலோக லிங்காய நமக
ஓம் டஸ்வருப லிங்காய நமக
ஓம் டமருக பிரிய லிங்காய நமக
ஓம் டக்காநாதபிரீத லிங்காய நமக
ஓம் ணத லிங்காய நமக
ஓம் ணகம்ய லிங்காய நமக
ஓம் தத்வரூபலிவ் நமக
ஓம் தாப நிவாரண லிங்காய நமக
ஓம் தேஜோமய லிங்காய நமக
ஓம் த்ரயம்பக லிங்காய நமக
ஓம் தரூப லிங்காய நமக
ஓம் தமஸ்தரூப லிங்காய நமக
ஓம் தாநவநாசக லிங்காய நமக
ஓம் தநதார்ச்சித லிங்காய நமக
ஓம் தநஞ்சயவர லிங்காய நமக
ஓம் நந்திவாகன லிங்காய நமக
ஓம் நகுலேச லிங்காய நமக
ஓம் நாத லிங்காய நமக
ஓம் நாகேச லிங்காய நமக
ஓம் நியமார்ச்சித லிங்காய நமக





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஓம் நிர்மல லிங்காய நமக
ஓம் பரேச லிங்காய நமக
ஓம் பாதாள லிங்காய நமக
ஓம் பூர்ண லிங்காய நமக
ஓம் பிருதுவி லிங்காய நமக
ஓம் பாலவிலோசந லிங்காய நமக
ஓம் பந்த விமோசந லிங்காய நமக
ஓம் பாண லிங்காய நமக
ஓம் பகார லிங்காய நமக
ஓம் பஸ்மவிலேபந லிங்காய நமக
ஓம் பீமசங்கர லிங்காய நமக
ஓம் புவநவ்யாபக லிங்காய நமக
ஓம் பைரவ லிங்காய நமக
ஓம் மங்கள பிரத லிங்காய நமக
ஓம் மகாகாள லிங்காய நமக
ஓம் மூர்த்தி லிங்காய நமக
ஓம் யக்ஞாங்க லிங்காய நமக
ஓம் யதிஸேவித லிங்காய நமக
ஓம் ரமணிய லிங்காய நமக
ஓம் ரகஸ்ய லிங்காய நமக
ஓம் ராமேச லிங்காய நமக
ஓம் ராவணார்ச்சித லிங்காய நமக
ஓம் ரூத்ர லிங்காய நமக
ஓம் லங்கேச லிங்காய நமக
ஓம் லாவண்ய லிங்காய நமக
ஓம் வன்னி லிங்காய நமக
ஓம் வாயுபூதகாளகஸ்தீச லிங்காய நமக
ஓம் விபீஷ்ண லிங்காய நமக
ஓம் வேத லிங்காய நமக
ஓம் சங்கர லிங்காய நமக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீசைல லிங்காய நமக
ஓம் ஷண்முக லிங்காய நமக
ஓம் ஷாட்குண்யாதீத லிங்காய நமக
ஓம் சம்சாரார்ணவதாரண லிங்காய நமக
ஓம் சர்வபாபநாசக லிங்காய நமக
ஓம் சாக்ஷி லிங்காய நமக
ஓம் சோமச லிங்காய நமக
ஓம் ஹரரூப லிங்காய நமக
ஓம் ளகுலீச லிங்காய நமக
ஓம் க்ஷமாக்ஷேத்ர லிங்காய நமக





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ சிவாஷ்டோத்தர சத - நாமாவளி

ஓம் சிவாய நம
ஓம் மஹேசவராய நம
ஓம் சம்வவே நம
ஓம் பிநாகினே நம
ஓம் சசிசேகராய நம
ஓம் வாமதேவாய நம
ஓம் விரூபக்ஷாய நம
ஓம் கபர்த்தினே நம
ஓம் நீலலோஹிதாய நம
ஓம் சங்கராய நம
ஓம் சூலபாணயே நம
ஓம் கட்வாங்கினே நம
ஓம் விஷ்ணுவல்லபாய நம
ஓம் சிபிவிஷ்டாய நம
ஓம் அம்பிகாநாதாய நம
ஓம் ஸ்ரீ கண்டாய நம
ஓம் பக்தவத்ஸலாய நம
ஓம் பவாய நம
ஓம் சர்வாய நம
ஓம் த்ரிலோகேசாய நம

ஓம் உத்ராய நம
ஓம் காபலினே நம
ஓம் காமாரயே நம
ஓம் அந்தகாஸுரஸுதனாய நம
ஓம் கங்காதாரய நம
ஓம் லலாடாஷாய நம
ஓம் காலகாலாய நம
ஓம் க்ருபாநிதய நம
ஓம் பீமாய நம
ஓம் பரசுஹஸ்தாய நம
ஓம் மருகபாணயே நம
ஓம் ஜடாதராய நம
ஓம் கைலாஸவாஸினே நம
ஓம் கவசினே நம
ஓம் கடோராய நம
ஓம் த்ரிபுராந்தகாய நம
ஓம் வ்ருஷாங்காய நம
ஓம் பஸ்மோத்தூலித-
விக்ர ஹாய நம
ஓம் ஸாமப்ப்ரியாய நம

ஓம் சிதிகண்டாய நம
ஓம் சிவப்பிரியாய நம
ஓம் அநீச்வராய நம
ஓம் ஸர்வஜ்ஞாய நம
ஓம் பரமாத்மனே நம

ஓம் ஸ்வர மயாய நம
ஓம் திரயிமூர்த்தயே நம
ஓம் ருத்ராய நம
ஓம் பூதபதயே நம
ஓம் ஸ்தாணவே நம

ஓம் ஸோமஸுர்யாக்னிலோசனாய நம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் அஹயேபுத்னயாய நம
ஓம் ஹவிஷே நம
ஓம் யஜ்ஞமயாய நம

ஓம் ஸோமாய நம
ஓம் பஞ்சபத்திராய நம
ஓம் ஸதாசிவாய நம
ஓம் விஸ்வேஸ்வராய நம
ஓம் வீரபத்ராய நம
ஓம் கணநாதாய நம
ஓம் ப்ரஜாபதயே நம
ஓம் கிரண்ய ரேதசே நம
ஓம் துர்த்தர்ஷாய நம
ஓம் கிரீசாய நம
ஓம் கிரிசாய நம
ஓம் அனகாய நம
ஓம் புஜங்கபூஷ்ணாய நம
ஓம் பர்க்காய நம
ஓம் கிரிதன்வனே நம
ஓம் கிரிப்ரியாய நம

ஓம் க்ருத்திவாஸஸே நம
ஓம் புராராதயே நம
ஓம் பகவதே நம
ஓம் ப்ரமதாதிபாய நம
ஓம் ம்ருத்யுஞ்ஜயாய நம
ஓம் ஸூக்ஷமதனவே நம
ஓம் ஜகத்வ்யாபினே நம
ஓம் ஜகத்குரவே நம
ஓம் வ்யோமகேசாய நம
ஓம் மஹோஸேனஜனகாய நம

ஓம் திகம்பராய நம
ஓம் அஷ்டமூர்த்தயே நம

ஓம் அநேகாத்மனே நம
ஓம் ஸாத்விகாய நம
ஓம் சுத்தவிக்ரஹாய நம
ஓம் சாஸ்வதாய நம
ஓம் கண்டபரசவே நம
ஓம் அஜயாய நம
ஓம் பாபவிமோசநாய நம
ஓம் மிருடாய நம
ஓம் பசுபதயே நம
ஓம் தேவாய நம
ஓம் மஹோதேவாய நம
ஓம் அவ்வியயாய நம
ஓம் ஹராய நம
ஓம் பூஷதந்தபிணுதேநம
ஓம் அவ்யய நம
ஓம் ஹராய நம

ஓம் பகநேத்ரபிதே நம
ஓம் அவ்யக்தாய நம
ஓம் தஷாத் வரகராய நம
ஓம் ஸஹஸ்ராஷாய நம
ஓம் ஸஹஸ்ரபதே நம
ஓம் அபவர்க்கப்ரதாய நம
ஓம் அனந்தாய நம
ஓம் தாரகாய நம
ஓம் பரமெஸ்வராய நம
ஓம் சாருவிக்ரமாய நம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோன்புக் கயிற்றின் இருபத்தொரு முடிச்சுக்களுக்கும் உரிய பூஜை

ஓம் சிவாய சிவாய நம

ஓம் சாந்தாய சாந்தாய நம

ஓம் மகாதேவாய மகாதேவ்வியை நம

ஓம் விருஷத்துவஜாய விருஷபத்துவ ஜாயாவை நம

ஓம் கௌரீசாய கௌர்யை நம

ஓம் ருத்தியாய ருத்திராண்யை நம

ஓம் பசுபதயே பசுபதயாயை நம

ஓம் பீமாயபீமாயை நம

ஓம் திரியம்பகாய திரியம்பகியை நம

ஓம் நீலலோகிதாய நீலலோகிதாயை நம

ஓம் ஹராய ஹராயை நம

ஓம் ஸ்மரகராய ஸ்மகராயை நம

ஓம் பிரார்க்கர்ய பிரார்க்காயை நம

ஓம் சம்பவே சாம்பவ்வியை நம

ஓம் சர்வாய சர்வாண்ணியை நம

ஓம் சதாசிவாய சதாவாயை நம

ஓம் ஈஸ்வராய ஈஸ்வார்யை நம

ஓம் உக்கிராய உக்கிராண்ணியை நம

ஓம் ஸ்ரீ கண்டாய சுகபோலாயை நம

ஓம் நீலகண்டாய கம்புகண்டியை நம

ஓம் மிருத்தியஞ் ஜயாயகாத்தியாஜின்னியை நம





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லிங்காஷ்டகம்

பிரம்ம முராரி ஸுராார்சித லிங்கம்
நிர்மல பாஷுர சோபித லிங்கம்
ஜன்மஜதுக்க விநாசக லிங்கம்
தத்பிரணமாமி ஜதாசிவ லிங்கம்

தேவ முனிப்பிரவார்ச்சித லிங்கம்
காம தஹம் கருணாகர லிங்கம்
ராவண தர்ப்ப விநாசன லிங்கம்
தத்பிரணமாமி ஸதாசிவ லிங்கம்

ஸர்வஸுகந்தி ஸுலேபித லிங்கம்
புத்தி விவர்த்தன காரண லிங்கம்
ஸித்த ஸுராஸுர வந்தித லிங்கம்
தத்பிரணமாமி ஸதாசிவ லிங்கம்

குங்கும சந்தண லேபித லிங்கம்
பங்கஜ ஹார ஸுசோபித லிங்கம்
ஸஞ்சித பாப விநாசன லிங்கம்
தத்பிரணமாமி ஸதாசிவ லிங்கம்

தேவ கணார்ச்சித ஸேவித லிங்கம்
பாவன பக்தி ப்ரவேச லிங்கம்
தினகர கோடி ப்ரபாகர லிங்கம்
தத்பிரணமாமி ஸதாசிவ லிங்கம்

அஸ்டதளோபரி வேஷ்டித ஸேவித லிங்கம்
ஸர்வ ஸமுத்பவ காரண லிங்கம்
அஸ்டதரித்திர விநாசித லிங்கம்
தத்பிரணமாமி ஸதாசிவ லிங்கம்

ஸுரகுரு ஸுர்வர பூஜித லிங்கம்
ஸரவண புஸ்ப ஸதாசிவ லிங்கம்
பராத்பரம் பரமாத்மக லிங்கம்
தத்பிரணமாமி ஸதாசிவ லிங்கம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதோ இவரை விடவா உங்களுக்கு தோல்விகள் அதிகம்?



01. 1831ல் வியாபாரத்தில் தோல்வி
02. 1832ல் சட்டசபைத் தேர்தலில் தோல்வி
03. 1834ல் வியாபாரத்தில் மீண்டும் தோல்வி
04. 1835 ல் அவரது காதலி மரணம்
05. 1836ல் அவருக்கு நரம்பு நோய் வந்தது
06. 1838 ல் தேர்தலில் தோல்வி
07. 1843ல் காங்கிரஸ் தேர்தலில் தோல்வி
08. 1848ல் மீண்டும் காங்கிரஸ் தேர்தலில் தோல்வி
09. 1855ல் செனட் தேர்தலில் தோல்வி
10. 1856ல் துணை அதிபர் தேர்தலில் தோல்வி
11. 1858ல் செனட் தேர்தலில் மீண்டும் தோல்வி
12. 1861ல் அமெரிக்க அதிபர் தேர்தலில் வென்று அமெரிக்க ஜனாதிபதியானார்.

★ இத்தனை தோல்விகளையும் சந்தித்தவர் வேறுயாருமில்லை. உலகம் அறிந்த மிகவும் பிரபலமான அமெரிக்க அதிபர் **ஆபிரகாம் லிங்கன்** தான்.

★ அதிக தோல்விகள், அதிக பாடங்கள். தோல்விகள் உங்களுக்கு பாடங்களாக அமையாவிட்டால் தான் அவை உண்மையாக தோல்விகளாகும்.

★ ஒரு மனிதன் விழாமல் வாழ்ந்தான் என்பது பெருமையல்ல வீழ்ந்த போதெல்லாம் எழுந்தான் என்பதுதான் பெருமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்ப் பழமொழிகளும் அவற்றுக்கேற்ற ஆங்கிலப் பழமொழிகளும்

1. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்
The face is index of the mind.

2. நிழலின் அருமை வெயிலில் தெரியும்
Bleesing aren't valved till they are gone.

3. காற்றுள்ள போதே தூற்றிக் கொள்
Make hay while the sun shines.

4. அவனின்றி அணுவும் அசையாது
No leaf moves but wills it.

5. நெருப்பின்றி புகையாது
No smoke without fire.

6. உண்மை நட்பை ஆபத்தில் அறியலாம்
A friend is need is a friend indeed.

### ஆண்டு நிறைவு விழாக்கள்

| | | |
|---|---|---|
| 10 வது ஆண்டு | - | தசரவிழா, தசாப்தவிழா |
| 25வது ஆண்டு | - | வெள்ளி விழா |
| 50வது ஆண்டு | - | பொன்விழா |
| 60 வது ஆண்டு | - | மணிவிழா, வைரவிழா |
| 75 வது ஆண்டு | - | பவள விழா |
| 80 வது ஆண்டு | - | அமுதவிழா |
| 100 வது ஆண்டு | - | நூற்றாண்டு விழா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனைக்கு சில..!

அடிக்கடி தவறு செய்கிறவன் அப்பாவி. ஒரு தவறை திரும்ப திரும்பச் செய்கிறவன் மூடன். ஒரு தவறுமே செய்யாதவன் மரக்கட்டை. தன்னையறியாமல் தவறு செய்து தன்னையறிந்து திருத்திக்கொள்கிறவனே மனிதன்.

காலை நேரம் எப்படி தோன்றுகிறதோ மாலை நேரமும் அப்படியே தோன்றுகிறது. விடியும் பொழுதிற்கும் முடியும் பொழுதிற்கும் தோற்றத்தில் வேறுபாடில்லை. இன்ப துன்பங்களையும் அப்படியே நினைத்து விடு. எந்தக் கட்டத்திலும் நீ அழ வேண்டிய அவசியமிருக்காது.

## பெருந்தவறுகள்

உழைக்காமல் ஈட்டிய செல்வம்
மனச்சாட்சி இல்லாத இன்பம்
பண்பு இல்லாத அறிவு
நல்லொழுக்கம் இல்லாத வணிகம்
தியாகம் இல்லாத வணக்கம்

-மகாத்மாகாந்தி -

**மனிதன் முயற்சியால் எவ்வளவு முடியுமோ அவ்வளவும் செய்துபார். ஒவ்வொரு தடவையும் உனக்கு தோன்றுவது கடவுள் இருக்கிறார் என்பதே.!**

**பணமும் பதவியும் மோசமானவை என்று ஞானிகள் சொல்கிறார்கள்? அவை வரக்கூடாதவனுக்கு வருவதால், கிடைக்கக்கூடாதவனுக்கு கிடைப்பதால்!**

"வெற்றி பெற்ற மனிதனாக வாழ்வதை விட உபயோகமுள்ள மனிதனாக வாழ முயற்சி செய்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனியவை கூறல் (அதிகாரம் - 10 )

01. இன்சொலால் ஈரம் அளைஇப் படிறுஇலவாம்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்.

Sweet speech flows from love, is free from develtb and is the word of the mouth of the virtuous.

02. அகன் அமர்ந்து ஈதலின் நன்றே முகன் அமர்ந்து
இன்சொலன் ஆகப் பெறின்.

Sweet speech with a cheerful countenance is better than a gift made with a joyous mind.

03. முகத்தான் அமர்ந்துஇனிது நோக்கி அகத்தான் ஆம்
இன்சொ லினதே அறம்.

Sweet speech , flowing from the heart ( mattered ) with a cheerful countenance and a sweet look is true virtue

04. துன்புறூஉம் துவ்வாமை இல்ஆகும் யார்மாட்டும்
இன்புறூஉம் இன்சொல் அவர்க்கு.

Sorrow - increasing poverty shall not come upon those who in all cases pleasure increasing sweetness of speech

05. பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
அணி; அல்ல மற்றுப் பிற.

Humility and sweetness of speech are the ornaments of man all others are not ( ornaments)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை
நாடி இனிய சொலின்.

If a man while seeking to speak usefully speaks also sweetly, his sins will diminish and his virtue increase.

07. நயன் ஈன்று நன்றி பயக்கும், பயன்ஈன்று
பண்பின் தலைபிரியாச் சொல்.

That speech, which , while imparting benefits ceases not to please will yield righteousness ( for this world) and merit ( for the next world )

08. சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்
இம்மையும் இன்பம் தரும்.

Sweet speech, free from meanness, will give pleasure both in this world and in the next

09. இன்சொல் இனிது ஈன்றல் காண்பான் எவன கொலோ
வன்சொல் வழங்குவது?

Why does he use harsh words who sees the pleasure which sweet speech yields

10. இனிய உளவாக இன்னாத கூறல்
கனி இருப்பக் காய்கவர்ந் தற்று.

To say disagreeable things when agreeable are at hand, is like eating unripe fruit when there is ripe

அறிவு வரும்போது மனிதன்
முதிர்ச்சியடைகின்றான்
அவனிடம் ஒழுக்கம் நிலவுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்சம்




✱ அமரர்களைக் குறிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எங்கள் அன்புத் தெய்வம் விபத்தின் போது மரணம் அடைந்த செய்தி கேட்டு அவரது பூதவுடலை எமது இல்லத்திற்கு கொண்டு வர சகல வழிகளிலும் உதவிய பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், பணிமனை, கிளிநொச்சி மற்றும் மாவட்ட பொது வைத்தியசாலை கிளிநொச்சி மற்றும் சாரதிகள் சங்க அனைத்து உறவுகளுக்கும் துணை கொடுத்த கரங்களுக்கும், இறுதிச் சடங்கு வரை ஓய்வுறக்கமின்றி எமக்கு உதவி புரிந்த அனைத்து அன்பர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி பதாகைகள் வெளியிட்டவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள் வெளியிட்டவர்களுக்கும், மலர்வளையம் மூலம் தம் அஞ்சலியை செலுத்திய நெஞ்சங்களுக்கும், இறுதி ஊர்வலத்தில் கலந்து எமக்கு ஆறுதல் அளித்த அனைவருக்கும், தந்திகள், கடிதங்கள், தொலைத் தொடர்புகள் மூலம் அனுதாபச் செய்திகள் வழங்கியோருக்கும், எமது துன்பத்தில் நேரடியாக பங்கு கொண்டு ஆறுதல் அளித்த உற்றார், உறவினர், நண்பர்கள், வைத்தியர்கள், சகல உத்தியோகத்தர்கள், பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவச் செல்வங்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

24.07.2017 ஆகிய இன்று நடைபெறுகின்ற அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்து சிறப்பித்த அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி

55/4, கணேசபுரம்,
கிளிநொச்சி.

குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org